உ
சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A.
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆனிமீ எஉ (1943 ஜூன்மீ 21 திங்கட்கிழமை) [இல. உக

## இந்தியாவின் அடுத்த வைஸ்ராய்

### பீல்ட் மார்ஷல் வேவலே நியமிக்கப்பட்டிருக்கிறார்

லண்டன், வெள்ளி

அடுத்த அக்டோபர் மாதத்தில் வேலையினின்றும் இளைப்பாறும் இந்திய வைஸ்ராய் மார்க்குவிஸ் ஒவ் லின்லித்கோவின் இடத்திற்கு வைஸ்ராயாகவும் இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாகவும் மன்னர் பீல்ட் மார்ஷல் ஸேர். ஆர்ச்சிபால்ட் பெர்சிவல் வேவலை நியமித்திருக்கிறார் என உத்தியோக முறையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது,

இந்திய சமஸ்தானங்களோடுள்ள தொடர்புகளில் முடிக்குரிய காரியங்களை அரசரின் பிரதிநிதியாக இருந்து செய்வதற்கும் லோர்ட் லின்லித்கோவின்பின், பீல்ட்மார்ஷல் வேவலையே அரசர் நியமித்திருக்கிறார்.

## 'காந்திஜியைப் பேட்டி காண்க'

சென்னை யூன் 14---

சென்னை மாகாணத்திற்கும் சமஸ்தானங்களுக்கும் வற்பட்டுள்ள காக்ஸார் ஜனுப் ஜின்னாவுக்கு அடியிற் கண்டபடி தந்தி கொடுத்திருக்கிறார்.

"அரசியற் பிரச்னையைச் சமரஸமாகத் தீர்ப்பதற்கு வழி கண்டுபிடிப்பதற்காகக் காந்திஜியைப் பேட்டி காணும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## ஸ்கொட்லந்திலிருந்து சிரியாவரை பலம் பொருந்திய சேனைகள்

வாஷிங்டன் ஜூன் 17—

ராய்ட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பதாவது:-

சமீப எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகளுக்குத் திட்டமான அபிவிருத்திகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் சென்ற 24 மணி நேரத்தில் இங்கு அதிகரித்திருக்கின்றன. ஐரோப்பாவில் ஏற்படக்கூடிய அபிவிருத்திகளிற் சில சத்துருவுக்கு அச்சத்தை உண்டுபண்ணுவதற்கான நேசதேச யுத்தத்தின் ஒரு அம்சமாகவிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. வெள்ளை மாளிகை அதிக விழிப்புடனிருக்கிறது. நிபுணர்கள் சிக்கலான இந்த நிலைமையை மிகவும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்கின்றனர்.

துருக்கிக்கும் விச்சிக்குமிடையே ஒரு பிளவு ஏற்பட்டிருப்பதாயும் ருமேனியா சமாதானத்தை நாடுவதாயும் பண்டலேரியாவில் படையெடுப்புத் துருப்புகள் குவிவதாயும் கிடைத்த அறிக்கைகள் அமெரிக்கப்பத்திரிகைகளிற் பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சிஸிலி ஆகாயத்திலிருந்து உக்கிரமாகக் குண்டுவீசித் தாக்கப்பட்ட பின்னர், ஜெர்மானியர் கிரீட்மீது படையெடுத்தபொழுது உபயோகித்ததுபோன்ற முறை கையாளப்படும். அதேசமயத்திற் கடலில அதிக நடவடிக்கை நடைபெறும்.

# யாழ்ப்பாணத்திற் பிரதம தளகர்த்தர்

## யாழ்ப்பாண மக்களின் சளையா ஊக்கத்திற்குப் பாராட்டு

### 10,000 ரூபாப் பணமுடிச்சு அளிக்கப்பட்டது

சென்ற சனிக்கிழமை காலை பிரதம தளகர்த்தர் அட்மிரல் ஸேர். ஜொப்ரே லெயிட்டன் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்தார்.

யாழ்ப்பாணப் புகைரத நிலையம் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. உள்நாட்டு விஷப மந்திரி திரு. A. மகாதேவா ஸேர். லெயிட்டனை வரவேற்று வடமாகாணத் தலைவர் M. பிரசாத்துக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். கச்சேரி முதலியார் திரு. S. K. அப்பாத்துரை அவருக்கு மாலை சூட்டினார். ஸேர். W. துரைசுவாமி S. நடேசன் (காங்கேசன் துறை அங்கத்தவர்) ஆகியோரும் புகைரத நிலையத்திற்கு வந்திருந்தனர்.

புகைரத நிலையத்துக்கு வெளியே சாரணர் வரிசையாக நின்று தளகர்த்தரை வரவேற்றனர். அவரும் அப்படையைப் பரிசோதித்தார்.

பிற்பகலில், யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஆகாயவிமானப் பாதுகாப்புப் படையின் பல்வேறு பகுதிகளைத் தளகர்த்தர் பரிசோதனை செய்தார்.

திரு. மகாதேவா தளகர்த்தரை நோக்கிப் பேசுங்கால், தாம் அவரை இலங்கையின் பிரதம தளகர்த்தர் என்ற முறையில் மாத்திரமல்ல, "இங்கிலாந்தின் வெல்லுதற்கரிய மனவூக்கத்தின் இலச்சினை"யாகவும் வரவேற்பதாகக் குறிப்பிட்டார்.

இதுவேயுமன்றி, யாழ்ப்பாணமக்களின் சார்பாக, 10,000 ரூபாவைத் தளகர்த்தர் அங்கீகரித்து யுத்த விஷயங்களில் எதற்கேனும் உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்று கூறி அத்தொகையையுந் தளகர்த்தரிடம் கொடுத்தார்.

அதன்பின், தளகர்த்தர் அளித்த பதில் வருமாறு:

யாழ்ப்பாணத்தி லுள்ள கிடைக்கக்கூடிய நிலங்களெல்லாம் பயிரிடப்பட்டுக் கமஞ் செய்யப்படுவதைக் காண எனக்கு மகிழ்ச்சி பயக்கின்றது. உங்கள் வீடுகள் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. கமங்களும் அவ்வாறே. இவை நீங்கள் முயற்சி மிக்க, சுத்தமான, செலவுச் சுருக்கமான மக்கள் எனபதைக் காட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தில் வாழ்க்கைப் பொருள்களுக்காக நீங்கள் இயற்கையோடு [illegible] யிருக்கிறீர்கள் [illegible] நாமெல்லோரும் பெரியதொரு போரில் இடுபட்டிருக்கிறோம். வெற்றி பெற்றாலே உயிர்வாழ்தல் பாதுகாக்கத்தக்கதாகும். எங்கள் பகைவரோ தந்திரிகள்; நேர்மையற்றவர்கள். அவர்களை வெல்வதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள மக்களது உதவி மாத்திரமல்ல, இந்நாட்டின் எப்பகுதியிலும் உள்ள ஆடவர் மகளிர் ஆகிய அனைவரது திரண்ட ஒத்துழைப்பும் ஊக்கமும் வேண்டப்படுகின்றது.

இங்கு எவருமே சோம்பலாயிருக்கக்கூடாது. எந்தப்பகுதியிலேனும் யுத்த முயற்சிக்கு ஒவ்வொருவரும் தம்மாலானதைச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணமக்கள் அமைதியான முயற்சிகளில் நிலையான ஊக்கமெடுப்பவர்களாய்ப் பழங்காலத்திற் பேர்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பேர் இலங்கையினெல்லையையுங் கடந்து சென்றதொன்று. கிழக்கில் எங்கள் படைகள் முன்னேறிப் போகவேண்டி நேரும்போது யாழ்ப்பாண மக்கள் தாம் அப்படையிற் போதிய பிரதிநிதித்துவம் எடுத்துக்கொள்வார்கள் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு.

நீங்கள் அளித்த பணமுடிப்புக்காக நன்றி கூறுகின்றேன்."

அன்று மாலைப் புகைவண்டியில் தளகர்த்தர் மீளவுங் கொழும்புக்குத் திரும்பினார்.

அவர் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்குங்கால் ஏறக்குறைய 90 மைல் பிரயாணஞ்செய்ய நேர்ந்தது.

திரு. மகாதேவாவோடு ஸேர். லெயிற்றன், றிக்கிளமேஷன் மைதானம், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி, பெரியகடை ஆகிய இடங்களைப் பார்வையிட்டபின, இராமநாதன் கல்லூரிக்குக் காரிற் சென்றார். அங்கு மாணவிகள் அவருக்கு நடனஞ்செய்து காட்டினர்.

அங்கிருந்து அவர், உடுவில், மானிப்பாய், வட்டுக்கோட்டை வழியாகக் காரைநகர்த் துறைமுகத்துக்குப்போய் அங்கு அழகுற அலங்கரிக்கப்பெற்று இவர்களுக்கென வைத்திருந்த ஒரு மோட்டார்வள்ளத்திலேறி ஊர்காவற்றுறை சேர்ந்தனர். அங்கு மாடு ஆடுகள் தங்கும் குவாரண்டைன் ஸ்தலத்தைப் பார்வையிட்டபின், றெட்ஸ்ஹவுஸுக்குப் போயினர். அங்கு ஊர்காவற்றுறை மணியகாரன் முதலியார் சாந்தியாப்பிள்ளையால் அவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. அதனபின், அவர்கள் மோட்டார்மூலம் காங்கேயன்துறை பருத்தித்துறை ஆகிய இடங்களுக்குப்போய், அங்கிருந்து [illegible] திரும்பினர்.

## ஹிட்லருக்குப் போல்கனில் "கண்"

லண்டன் ஜூன் 17

இத்தாலியை விட்டு ஹிட்லர் போல்கன் நாடுகளைக் கவனித்து வருகிறாரென்று "நியூயார்க் ஷெயர் போஸ்ட்" பத்திரிகையின் இராணுவ நிபுணர் இன்று எழுதுகிறார்:-

தென்கிழக்கில் ருஷ்யா பிரிட்டிஷாரோடு சேர்ந்து கொள்ளுமென்று ஜெர்மன் இராணுவ பீடம் அஞ்சுகிறது. ருஷ்யப் போர்முனையைச் சுருக்கி போல்கன் நாடுகளைப் பலப்படுத்த அது விரும்புவதாகத் தெரிகிறது. ருஷ்ய அரசாங்கத்திலிருந்து அச்சுப்படைகள் பின்வாங்குவதைப் பெர்லின் வட்டாரங்கள் ஆட்சேபிக்கவில்லை. இந்தப் படைகள் கிரீஸுக்கு அனுப்பப்படுகின்றன,

இப்போது செஞ்சேனைக்கு இருக்கும் எதிர்ப்பு குறைந்துவருவதாக நம்பப்படுகிறது.

## நேப்பிள்ஸ் மீண்டும் தாக்கப்பட்டது

லண்டன், ஜூன் 18

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேச தலைமைக்காரியாலய அறிக்கையென்று கூறுவதாவது:— 16ம் திகதியன்றிரவு நமது வெலிங்டன் வெடிகுண்டு விமானங்கள் நேபிள்ஸ் துறைமுகப் பகுதியைத் தாக்கின. நேற்று ரோந்து நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றன. இரண்டு சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நமது விமானங்கள் அனைத்தும் பத்திரமாகத் திரும்பின. கெய்ரோவிலிருந்து இன்று வெளியான மத்திய கிழக்கு விமானப்படை அறிக்கையொன்று கூறுவதாவது:- நேற்றுப் பகலில் அமெரிக்க கன வெடிகுண்டு விமானங்கள் காமிஸ்கோவிலும் பிஸ்காரியிலுமுள்ள சத்துரு விமான நிலயங்களைத் தாக்கின. காமிஸ்கோவில் விமான நிலயத்திற்குத் தெற்கேயுள்ள தொழிற்சாலைகள்மீதும் வெடிகுண்டுகள் விழுந்தன. எஜியன் கடலில் டெலாஸ் தீவிற்கருகிற் சென்று கொண்டிருந்த சத்துருக் கப்பலொன்றை நமது போர் விமானங்கள் தாக்கின. நேற்று மாலை சத்துரு விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

## கைத்தொழிற் கல்வி அபிவிருந்தி

சென்னை யூன் 16—

கைத்தொழிற் கல்வியில் அபிவிருத்திக்கு உபயோகப்படும்பொருட்டுச் சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலைக்குப் பரிஸ்டர். திரு. ஆர். எம். அழகப்பச்செட்டியார் ஐந்துலட்சம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். இச்சர்வகலாசாலைக்கு இதுவரை கொடுக்கப்பட்டிருக்கும் நன்கொடைகளில் இதுவே மிகவும் அதிகமான தொகையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸ
ஆனிமீ எ௨ திங்கட்கிழமை

## யுத்தத்தில் ஒரு ஓய்வு

வடஆபிரிக்க யுத்தம் நடந்த பின் சிலகாலமாக யுத்தத்தில் ஒரு ஓய்வு நிகழ்கின்றதெனலாம். இந்த ஓய்வு நன்மைக்கென நாம் எண்ணிக்கொண்டிருக்கவொண்ணாது; வில்லு வளைவதும் வேழம் உறங்குவதும் வல்லியம் பதுங்குவதும் பின்பு பெருந் தீமைக்கென்று உலகத்திலே சொல்லுவார்கள். பிருத்தானிய அமெரிக்க தத்துவ ராச்சியத்தினர் இப்பொழுது ஹிட்லர்கைப்பட்டிருக்கும் ஐரோப்பாக் கண்டத்தின்மீது விரைவிற் படையெடுத்துச்சென்று பெருஞ் சமர் புரிந்து பகைவரைத் தோல்வியுறச் செய்து யுத்தத்திற்கு முடிவுகாணவும் உலக சமாதானத்தைத் தேடிவிடவும் உத்தேசித்து அவற்றிற்கு ஆகவேண்டிய முயற்சியைச் செய்கின்றனர். இதுகாரணமாகத்தான் இப்பொழுது சிறிது ஓய்வு நேர்ந்துள்ளதெனலாம்; இப்படியான ஓய்வு பிரசண்டமாருத மெனப்படும் பெருங் காற்றுக்கிடையே அற்பநேரம் தோன்றும் ஓய்விற்கு ஒப்பாகுமென்ற கருத்துள்ள ஒருஆங்கிலப்பழமொழியுண்டு. இந்த ஓய்வு நேரத்திலே பிருத்தானிய அமெரிக்கரென்னும் ஐக்கிய ராச்சியத்தினர் வரவிருக்கும் யுத்தத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்ய, பகைவர்கள் மாத்திரம் சும்மாவிருக்கின்றனரென நாம் எண்ணிக்கொள்ளவொண்ணாது. பகைவர்களும் இப்படியான ஒரு படையெடுப்பு அயிரோப்பாக்கண்டத்திலே தங்கட்கு மாறாக நேருமென்று அநுமானித்தவர்களாய் அதற்காகவேண்டிய ஆயத்தங்களைச் செய்து வருகிறார்களென இப்பொழுது கிடைத்துவரும் தந்திச் சமாசாரங்களைக்கொண்டு அறியக் கிடக்கின்றது.

ஜர்மனியர் தம் பகைவரைத் தாமாகச்சென்று தாக்குவதற்கும், பகைவர் தம்மை வந்து தாக்கும்போது தாம் அவர்களுடன் எதிர்த்துச் சமர்புரிந்து தம்மைப் பாதுகாத்தற்கும் வழிவகைகளை யோசித்து ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்கிறார்களாம். பால்ரிக் கடலிலிருந்து வடகடலுக்கும் அத்திலாந்திச் சமுத்திரத்துள்ள துறைமுகங்களுக்கும் புதுமுறையில் அமைக்கப்பட்ட ஜர்மனிய கப்பல்கள் பல இப்பொழுதே செல்கின்றனவாம். பன்னூற்றுக்கணக்கான வேகமாகச் செல்லக்கூடிய சைநியக் கப்பல்கள் றொற்றர்டாம், அன்ற்வெர்ப் என்னும் தானங்களிற் சேர்ந்து நிற்கின்றனவாம். தென் டான்யூப் நதியிலுள்ள துறைமுகங்களில் பல யூ-வள்ளங்கள் திரண்டு நிற்கின்றனவாம். பிருத்தானிய அமெரிக்கரின் படையெழுச்சி பிரான்ஸிலேனும் ஒல்லாந்து பெல்ஜியம் என்னும் நாடுகளிலேனுந்தான் முதன் முதல் தொடங்குமென்பது ஜர்மனியருடைய கொள்கையாம். ஜர்மனிய இத்தலிய சைநியங்கள் அயிரோப்பாக்கண்டத்திலுள்ள பிரதான தானங்கள் எவ்விடத்திலும் அரண்செய்து நிற்பதால் அங்கே படையெடுத்து வருவது அசாத்தியமான காரியமென்று ஜர்மனியர் சொல்லுகிறார்களாம். கிறீற் அரண்செய்யப்பட்டு ஜர்மனியர்வசம் இருக்கும்போது அயிரோப்பாவின் தென்கிழ்ப் பாகத்தைத் தாம் பாதுகாத்தல் முடியுமென்றும், பல்கேரியரும் றூமேனியரும் அவுஸ்திரியரும் பகைவரை எதிர்த்து யுத்தஞ் செய்வரென்றும் ஜர்மனிய அதிகாரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். அயிரோப்பாக்கண்டத்திற் படையெடுப்பு நேரும்போது ஸ்பானிய அதிகாரியாகிய விறய்ங்கோ ஜர்மனியருக்கே உதவியாக நிற்கக்கூடுமெனப் பிருத்தானிய இராசதந்திரிகளும் எண்ணுகிறார்கள்; துருக்கி இப்பொழுது எப்பக்கத்துஞ் சேர்தலின்றிப் பொதுமை வகித்திருக்கின்றதாம்; ஆனால் "விழுந்த பக்கத்திற்குக் குறிசுடுவது" அந்நாட்டின் இயல்பெனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

இந்த யுத்த நிலைமையை நோக்குமிடத்து இப்போதைக்கு யுத்தம் ஒருமுடிவிற்கு வரப்போவதில்லையென்பதும், இனி மேற்றான் கோரமான உலக யுத்தம் தொடங்குமென எதிர்பார்த்திருக்கலாமென்பதும், சனங்கள் தாம் படவேண்டிய கஷ்டங்களையெல்லாம் பட்டுக்கொண்டு, நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதானென்பதும் அறியக் கிடக்கின்றன.

—·—

## மகோற்சவம்

இங்குள்ள புராதன புண்ணிய சிவதலங்களுள் ஒன்றாக விளங்கும் வடமராட்சியைச் சேர்ந்த புலோலி பர்வத வர்த்தனிசமேத பசுவதீசுவரர் கோவிலில் இந்த ஆனி மாதம் 10௨ வியாழக்கிழமை துவசாரோகணமாகி மகோற்சவம் கிரமமாக நடைபெறும்; ஆனி மாசம் 24-ம்௨ வியாழக்கிழமை இரதோற்சவமும் அடுத்த நாளாகிய ஆனியுத்தர புண்ணிய தினத்திலே நடேசாபிஷேகம் தீர்த்தோற்சவ மென்னுமிவைகள் நடைபெறும். (மேற்படி கோயில் தீர்த்தம் ஆனி மாதம் 18-ம் திகதி எனத் திருக்கணித பஞ்சாக்கத்திற் குறிப்பிட்டிருத்தல் தவறென அறிவிக்கப்படுகின்றது.)

—·—

இலச்சியப் பகுதி:

# பாலைக் கலி

[க. கி. ந.]

III

இவ்வாறே தலைவியின் அன்பையும் அவடன் பிரிவாற்றாமையையும் அவற்றைத் தோழி தலைவனுக்கு உரைப்பக் கூறுஞ் சிறப்பையும் இன்னும் பல செய்யுட்களுட் காணலாம். அவற்றுள், 18-ம் 19-ம் செய்யுள்களை மாத்திரம் ஈண்டு எடுத்துக் காட்டி மேலே செல்வாம். இவ்விரு செய்யுள்களும் உருவத்திற் சிறியவை; அதுவேயு மன்றி இனியவை. 18-ம் செய்யுள் (1) நாளது சின்மையும் (2) இளமையது அருமையும், (3) தாளாண் பக்கமும் (4) தகுதியது அமைதியும், (5) இன்மையது இழிவும், (6) உடைமையது உயர்ச்சியும் (7) அன்பினது அகலமும் (8) அகற்சியது அருமையும் என்று கூறப்பட்ட எட்டினையுந் தலைவன் கூற, அது கேட்ட தோழி தலைவன் முன்னொருகாற் கூறிய வற்றினை அவனுக்குக் கூறி, அவனைப் போகாது தடுத்தமையைத் துறையாக உடையது.

"ஐயனே! அரிய பொருளீட்டத் துச் செல்லுகின்ற ஆசையினாலே உள்ளந் தூண்டப் பிரிந்து போயிருத்தலை நினையாதே; தலைவியின் தோளில் நீவிரும்பி எழுதிய தொய்யிலுண்டே அதன் அழகை நினைத்துப்பார். இவள் மார்பிற் சுணங்குண்டே, அது நின்னையே வலியாகவுடையது. (அஃதாவது நின்னைப் பிரியின் அஃது அழகு குன்றிவிடும் என்பது கருத்து) அச் சுணங்கின் அழகை நினைத்துப்பார். நீயோ பொருளை நன்குமதித்துச் செல்கின்றனை, அப்பொருளும் இப்பொழுதே (அஃதாவது போனவுடனே) முகந்து கொள்ளுதற்கு ஏற்றதாய் ஓரிடத்தே கிடவாது. பொருள் தேடச் சென்றவர்கள் தத்தம் நிலைமைக் கேற்பக் காலம் நீட்டிப்பநின்றே தேடுதல் வேண்டும். இனி, பொருள் தேடப் போகாதவர்கள் எல்லாரும் உண்ணுதிருக்கிறார்களா? அவர்களும் ஒருவாற்றான் உண்டே காலத்தைப் போக்குகின்றனர். இளமையையும் இருபக்கத்திலும் ஒத்த காமத்தையுஞ் சேரப் பெற்றவர்கள் செல்வத்லதை விரும்பத் தக்க ஒரு நன்மை அச் செல்வத்திற் கிருக்கிறதா? இல்லையே. இல்வாழ்க்கை என்றால் என்னென் றெண்ணுகிறாய்! தமக்குக் கற்பித்த நாளெல்லாம் உள்ளே ஒரோவொரு கைகளாலே தம்முள்ளே தழுவிக்கொண்டு புறத்தே ஒரோவொரு கைகளாலே ஒன்றன் பகுதியாகிய ஆடையை உடுத்திருப்பவரே யாயினும் (அத்துணை வறுமையுடையவராயினும் என்பது கருத்து) பிரியாதிருப்பவர்களுடைய வாழ்க்கையே வாழ்க்கை. கழிந்த இளமையோ மீளவும் பெறுதற்கு அரிது" என்று கூறித் தடுக்கின்றாள். இச் செய்யுளில் வரும்

"உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ
ஒரோஒகை
ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே
யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே
வாழ்க்கை"

என்னும் பகுதி தலைவியின் அன்பைத் தெளிவாகக் காட்டுகின்றதன்றோ? இச் செய்யுளில் வரும் நாளது சின்மை முதலிய எட்டையும் முறையே உரைநோக்கிக் கண்டு கொள்க.

அடுத்த செய்யுளில் தலைவியின் அன்பு இத்தகையது என்பதை மிகத் தெளிவாகக் காணலாம்,

"ஐயனே! களவொழுக்கம் நிகழ்ந்த நாளில், வஞ்சனை யிலவாகிய இனியசொற்களைப் பையச் சொல்லி முயங்கினையே, அவை யெல்லாம் பொய்யா யிருத்தலை அறிவில்லாத யான் எங்ஙனம் அறிவேன்? அகன்ற மனையிலுள்ளாரால் அடக்க வொண்ணாத அலரை எம்மிடத்தே தந்து (ஞாயிறு முனிந்த வெய்தாகிய) காட்டைப் போக நினைத்தலை இப்போ தறிந்தேன். நீ அறுதியாக மகனல்லை" என்று தோழி தலைவனை நோக்கிக் கூறுகின்றாள். ஈண்டு மகனல்லை என்பது எத்துணை உணர்ச்சியோடு கூறப்பட்டுள்ளது என்பது சிந்திக்கத்தக்கது. மகளொருத்தி ஓர் ஆடவனை நோக்கி "நீ ஆண்தன்மையையுடையவனு?" என்று கேட்குங்கால் அவ்வார்த்தை அவனுளத்தை எவ்வளவு ஆழமாகத் தாக்கும் என்பதும் சிந்திக்கத் தக்கது. மேலும், தோழி செலவு விலக்கவும் கேளாது பிரிவின்மேற் செல்லும் உளத்தனாயின தலைவனை நோக்கிப் பின்னும் கூறும் வார்த்தைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந்தரத்தன. "சரி, நீ போகிற் போக. போய் அங்குசெய்யுங் காரியத்தை முடித்துக் கொள்க. ஆயின், ஒன்று. அவ்வாறு முடித்த பின்னர், இங்கிருந்து அங்கு யாரேனும் வருவாருளரேல், அவரிடம் "எம்மைநினைத்து வருந்தும்படியாக அன்பு நீங்கும்படி மனம் வேறுபட்டு யாம் துறக்கப்பட்டவளுடைய செய்தியும் அறிவீரோ?" என்று மாத்திரம் எம்மைப் பற்றி வினவ வேண்டாம். ஏனெனில், வினவின், ஞாயிறு போல விளங்குகின்ற நின் தலைமை கெடும்படியாக, நீ செய்யும் கெடுதற்கரிய காரியம் முடியாமற் போகக் கூடியதாக அவ்விடத்தே ஓர் அவலம் பிறத்தலும் உண்டு" என்று கூறுகின்றாள். என்னையோ அவ்வவலம் என்பதைத் தலைவனிடம் சொல்லாற் சொல்லாமல் அவனைக் குறிப்பால் உணரவிட்டு விடுகிறாள். (நீ பிரியின், தலைவி இறந்து படவும் கூடும். அதனை அவர்கள் உன்னிடம் வந்து சொல்லவுங் கூடும் என்பது கருத்து) இதனாற் றலைவிக்குத் தலைவன்மாட்டுள்ள அன்பு எத்தகையது என்பது இனிது புலப்படுகின்றதன்றோ?

"செல்லினிச் சென்றீ
செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியாம்
உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ
என்று வருவாரை
என்திறம் யாதும்
வினவல்; வினவின்
பகலில் விளங்கும்நின்
செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை
முற்றாமல் ஆண்(டு) ஓர்
அவலம் படுதலு முண்டு"

என்ன அழகான பாட்டு! அன்பின்றிறம் எத்துணை யழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. "துறந்து போமெனச் சொற்றசொற் றேறுமோ?" என்னும் கம்பர் கேள்வி மீண்டும் ஈண்டு நினைவு கூரத்தக்கதன்றோ? (இக் கேள்வியைத் தான் தோழியுந் தலைவனிடம் கேட்கின்றாள் என்றும் வைத்துக் கொள்ளலாம்) இத்தகைய இடங்களிற் றோழியின் சொல்வன்மை சாலவும் மெச்சத் தக்கது. கேட்ட தலைவன் (எத்துணைப் பெரியனாயினும் அறிவு நுட்பம் படைத்தவனாயினும்)

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத் தட்டு )

### செவ்வாய் யூன் 22

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8துதிப்பாடல்கள்†8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி பி விசாலாக்ஷி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஸ்ரீரங்கம் செல்லம் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 ஸ்ரீரங்கம் செல்லம் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 டி பி விசாலாக்ஷி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ருஷ்யா இரண்டுவருட யுத்தம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 செஞ்சேனை முன்னேற்றம் விசேஷ நிகழ்ச்சி 8 மதராஸில் உள்ளபடி (ஆர் வசுந்தராதேவி பாட்டு) 9-15 காஞ்சனமாலா† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆ இ ரே வித்வான் தில்ருபா 10 ஈசன் எங்கே இசைச் சித்திரம் 10-30 முடிவு.

### புதன் யூன் 23

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் எஸ் மணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 எஸ் எஸ் மணி பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 பி வி நாகராஜன் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 ஆர் நாராயணசாமி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்யக்கச்சேரி7-30அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 திரைகானம்† 8 பி வி நாகராஜன் புல்லாங்குழல் 8.30 அமெரிக்க வாக்கு 8-45 ஆர் நாராயணசாமி பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆர் வி சுப்பிரமணியம் கடத்தூர் சங்கராமஐயர் இரு வீணைகள் 10 மதராஸில் உள்ளபடி 10-30 முடிவு.

### வியாழன் யூன் 24

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 தந்தி இசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 அம்பலப்புழை பி கிருஷ்ணன் நாயர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1–30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40திருப்பாப்புலியூர் ஆர் வேங்கடாரமஐயர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமஐயர் வயலின் 5-45 இசைப் பயிற்சி 6அம்பலப்புழை பி கிருஷ்ணன் நாயர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6–40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்தியகோஷ்டி 8 மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அபூர்வ ராகங்கள் 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

---


### தேவை

யாழ்ப்பாணம் பெண்கள் கைத்தொழிற்பாடசாலைக்கு ஓர் அநுபவம்மிகுந்த மேற்றறன் (Matron மேற்பார்வைக்காரி) தேவை. இருக்க அறையும் சாப்பாடும் தகுதிக்கேற்ற சம்பளமும் பள்ளிக்கூடத்தில் உண்டு. விரும்புவோர் 30.6-43 திகதிக்குமுன் நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பப் பத்திரம் அனுப்பவும்.

(Mrs.) R. பொன்னம்பலம்,
காரியதரிசி.

Mis. 48, 7, 14, 21, 28-6-43


# முருகன் பெருமை

(ஸ்ரீமதி. ர. சேது அம்மையார்)

(முற்றொடர்)

“சூலம் பிடித்து எமபாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கு ஒருகாலு
மஞ்சேன் கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான்
குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையும் உண்டே
நமக்கொரு மெய்த்துணையே”

எமபயத்தை அகற்ற வல்லது வேல். ஏனைய துன்பங்களைக் காட்டிலும் இறக்கும் தருவாயில், இறுதியில் நேரும் யமன் தொந்தரையையே பெரும் துன்பமாகக் கருதுவோம் நாம். அத்தகைய கொடிய துன்பத்தையும் அகற்றவல்லது வேல். வேலைப் பற்றிப் பல பேசலாம். அது வினையைப் போக்குவது “வினையோட விடும் கதிர்வேல் மறவேன்” என்றுள்ளது அநுபூதியில். அன்பர்களை நீதியில் நடத்துமது, இங்ஙனம் பல செய்யும் சீர்மையுடையது இவ்வேல்.

அடுத்தபடியாக உள்ளன மயிலும் சேவலும். சூரசம்ஹாரத்தின் பின் சூரனுடைய இரு உயிர்களுள் சூரன் என்ற உயிர் மயிலாகவும் பதுமன் என்ற இன்னொன்று சேவலாகவும் ஆயின. ஒன்று வாகனமாயிற்று. இன்னொன்று கொடியாயிற்று. ஒன்றை மட்டும் தாழ்த்தி இன்னொன்றுக்கு மட்டும் உயர்வு கொடுத்தது ஏன் என்ற கேள்வி எழுமாயின் அதற்கும் காரணம் உண்டு.

எவரொருவரை எடுத்துக் கொண்டபோதிலும் அவரிடம் சில நல்ல குணங்களும் சில தீயகுணங்களும் காணலாமேயன்றி, எவரேனும் முற்றும் நல்லவராக அல்லது முற்றும் தீயவராக நாம் பார்ப்பதேயில்லை. எவர்க்கும் இவ்விரு குணங்களும் அமைந்திருக்கும். ஆனால், ஒன்று மிகுந்து, இன்னொன்று குறைந்திருக்கலாம். அதேபோல் புராணத்திலும், நல்லகுணம், சத்துவ குணம் செந்நிறச் சேவலைச் சுட்டும். தீயகுணம், அசத்துவ குணம், கருநிற மயிலைச்சுட்டும். சேவல் வெளிச்சத்தை விரும்பும். காலையில் கதிரவன் புறப்படும் போது கூவி உலகத்தை எழுப்பும். மயிலோ இருளை விரும்பும் தன்மையது. கருநிற முகிலைக் கண்டதும் தோகை விரித்தாடும். ஆதலின் சத்துவ குணம் உயர்த்தப்பட்டது. அசத்துவ குணம் தாழ்த்தப்பட்டது. இவ்விரண்டையும் பிரித்தது வேல், ஞானம். அருணகிரி நாதர் பெருமானும் அம்முறையிலேயே “ஆடும்பரி, வேல், அணி சேவல்” என்று வேலை நடுவில் அமைத்தார்.

இனி, முருகனின் இன்னும் பல பெருமைகளைக் கவனிப்போம். முருகனின் அன்பர்கள், முருகனையே எண்ணத்தில் எப்போதும் வைத்துள்ளோர்கள், எல்லோரும் பயப்படும் மரணபயம் ஒழிவார்கள், எமனிடம் அதிகாரம் பேசுவார்கள். கந்தரலங்காரத்திலுள்ள இரண்டு செய்யுட்களைப் பார்ப்போம்.

“பட்டிக் கடாவில் வரும்
அந்தகா உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்ட லாது விடேன்
வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருத செவ்வேற்
பெருமான் திருமுன்பு நின்றேன்
கட்டிப் புறப்படடா சத்திவாள்
என்தன் கையதுவே”

காலனை ‘அடா’ என்று கூப்பிடுதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு.

“தண்டாயுதமும் திரிசூலமும்
விழத்தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன்
செந்தில் வேலனுக்குத்
தொண்டாகியவென் அவிரோத
ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார்
சற்று என்கைக் கெட்டவே’

இது பாட்டாகக் காணப்படவில்லை. சண்டையில் கோபமோடு பேசுகிற பேச்சாகவே அமைந்திருக்கின்றது.

எமனுக்கு மட்டுமல்ல, நாள் நக்ஷத்திரம் முதலியனவற்றுக்கும் அஞ்சார் முருகனின் மெய்யன்பர்.

“நாளென் செயும் வினைதான்
என்செயும் எனை நாடி வந்த
கோளென்செயும் கொடுங்
கூற்றென் செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு
முன்னே வந்து தோன்றிடினே”

நிற்க. முருகன் குறைந்த அறிவிலே போகத்தையும் நிறைந்த அறிவிலே வீட்டையும் தருகின்றான். இரண்டையும் ஒருவனே தருகின்றான். நடுநிலைமையி லிருப்பவள் தாய். அவள் பிறந்த குழந்தைக்குப் பால் தருகின்றாள். அவளே வளர்ந்த இளைஞனுக்குச் சற்றுக் கடினமாகச் செரிக்கத்தக்க பலகாரங்கள் தருகின்றாள். அவ்வாறே நடுநிலைமையில் எப்போதுமிருக்கும் இறைவன் அவரவர் தகுதிக்கேற்ப வேண்டியவற்றை உதவுகிறான். அவன் தரும் எவ்வொன்றும் பேரின்பத்தையே குறிக்கோளாகக்கொண்டு விளங்குகின்றது. நிறைந்ததும் சுத்தமானதுமாக இருப்பது பேரின்பமே. போகத்தையும் வீட்டையும் உதவும் வள்ளல் அவன் ஒருவனே. அவன் ஒருவனே சிவன் முதலாகிய ஆறுருவங்களையும் கொண்டவன். அவனொருவனே ஆறுமதங்களுக்கும் தலைவனாக வீற்றிருக்கின்றான். இவ்வுண்மைக்கு இருப்பிடமாக ஆறுமுகன் ஆறுமுகங்களும் இருக்கின்றன. “யான் ஒருவனே ஆறு சமயங்கள்தொறும் எழுந்தருளுகின்றேன். யான் ஒருவனே ஆங்காங்கிருந்து என்னை வணங்கும் அன்பருக்கு முத்தி தருகின்றேன்” என்று கூறுகின்றான்.

“ஆறு சமயந்தொறும் வேறு
வேறின்றி யான் ஒருவனே
அங்கங்கிருந்து அன்பருக்கு
முத்திதரு வித்தென்று
யாவர்க்கும் அறிவித்த வதன
மணியே”

என்பது சந்நிதிமுறை. முருகன் சமஷ்டித் தெய்வம். தனியாகப் பார்க்கும்போது சிவன் முதலிய வேறுபாடுகள் தோன்றும். போகமாகிய தானத்தையும் ஞானமாகிய தர்மத்தையும் உயிர்த்தொகைகளுக்கு அருளுகின்றன அவன் கரம். மேற்கூறியதில் வதனமணி முத்தியை யாருக்குத் தருவான் என்று நோக்குங்கால் அவன் இன்ன தேசத்துப் பிறந்தானிலன்; இன்ன குலத்தில் பிறந்தானிலன்; இன்ன காலத்து வாழ்ந்தவனிலன்; இன்ன ஆச்சிரமத்தைக் கைக்கொண்டவனிலன் என்றெல்லாம் நோக்காது யாரேயாயினும் அன்பு செய்வார்க்கு வீட்டின்பத்தைத் தருகிறான். அவன் நம்மிடம் எதிர்பார்ப்பது இவ்வன்பு ஒன்றே வேறேதுமில்லை. நாம் ஒவ்வொருவரும் அன்பை வளர்த்தல் வேண்டும். நம் உற்றார், உறவினர், நண்பர்வரை மட்டும் நிறுத்திவிடாது ஏனைய உயிர்களிடத்தும் அன்பு செலுத்தல் வேண்டும். அன்பு [illegible] தொண்டின் மூலமாய்த்தான் காண்பித்தல் வேண்டும். அன்பு தொண்டின் வழிப் படாவிடில் அது அன்பாகாது. முருகனிடத்திலுள்ள அன்பை அவனுக்கே தொண்டுசெய்து காண்பித்தல் வேண்டும் என்ற அவசியமில்லை. அவன் குழவிகளாகிய ஏனைய உயிர்களுக்குத் தொண்டு செய்தலே சாலும். தன்னுயிரைப் போல் மன்னுயிரைப் பார்ப்பது போன்ற தொண்டு கிடையாது. முருகனுக்குத் தொண்டுசெய்வார் முக்கரணங்களாலும் செய்யலாம். மனம், வாக்குக் காயங்கள் மயிலேறும் வள்ளிநாதன்பால் சென்றபோதே பெருமையுடையன. ஆனால், கடவுள் தொண்டுடன் உயிர்த்தொண்டும் செய்தல் வேண்டும். நம் அன்பு மேலும் மேலும் பரவி, இறவாத இன்ப அன்பாக மாறுதல் வேண்டும். நம் காரைக்காலம்மையாரும் எம்பெருமானிடத்து அத்தகைய அன்பையே வேண்டினார்கள்.

“இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ்இருக்க”

என்றார்.

அன்பு, சிவஞான போதத்தில் சொல்லியிருப்பதுபோல் மலிந்தும் இருத்தல் வேண்டும் அயராஅன்பாகவும் இருக்கவேணடும்.

நிற்க, முருகன் தனக்குப் பெருந்தீமை செய்தவனாயினும் அவன் அன்பனாயின் அருள் செய்குவான், திட்டினும், மகிழ்கின்றான். ஏன்? ‘நம்மை ஆதாரமாகக் கொண்டு தானே திட்டுகின்றான் என்பது அவன் எண்ணம். முருகன் தயவுக்கு அளவேயில்லை. அன்பர்களிடத்தில தானே செல்வான். அவர் அறியாது ‘நீ யார்’ என்றால் தன்னையும் அறிவிப்பான், ‘நின் துன்பத்தைக் களைதற்கே வந்தேன். விரைவில் உன் துன்பங்கள் நீங்கும்’ என ஆறுதல் கூறுவான். பிறர் துன்புறச் சகியான்.

“நோவ வுரையான் எம்மை
நோவக்கண் பார்த்திடான்
சாவ நினையான் தளரவிடான்.
பாவனைய
சொல்லாய்க் குறத்தி துணைபிரி
யாப் போரூரான்
நல்வாய்ப்பு அரையன் நெஞ்சே
நாடு”

முருகனுடைய பெருமையை அளந்தறிதற்கு எல்லை, வரம்பு கிடையாது.

ஞானந்தானுருவாகிய நாயக
னியல்பை
யானு நீயுமாய் இசைத்து
மென்றால் அஃதெளிதோ!
மோனந் தீர்கலா முனிவருந்
தேற்றிலர் முழுவதும்
தானுங் காண்கிலன் இன்னமும்
தன்பெருந் தலைமை”

என்பதுபோல் அவனே அவன் பெருமையை முற்றும் உணர்ந்திலன் என்றால் என்போன்ற அறிவிலும் அநுபவத்திலும் மிகச்சிறியவர்க்கு எடுத்துக் கூறுதல் முடியுமோ?

தொடர்ந்து வரும் சொல்விருந்துக்காகக் காத்துக்கொண்டிருக்கும் நீங்களனைவரும், இதுவரை, இச்சிறிய சொற்பொழிவை மிகப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

—சித்தாந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீமாஞ்ச தரிசனம்

(திரு. வ. கந்தையா, கொழும்பு வானொலியில் பேசியது)

மீமாஞ்ச தரிசனம்

இந்தியரின் சிறந்த அறுவகைத் தத்துவஞான ஆராய்ச்சிகளுள் ஒன்று. அறுவகைத் தத்துவஞான ஆராய்ச்சிகளை ஷட் தரிசனம் என்பர், இவை ஆறும் அறிவித்துறைகள். மீமாஞ்சா என்ற வடமொழிச் சொல்லுக்கு ஆராய்ச்சி, விசாரம், விசாரணை என்பது பொருள். மீமாஞ்சை எதனை ஆராய்கின்றது? வேத சங்ஹிதை, பிராம்மணங்களை ஆராய்கின்றது. அவை மந்திரவாக்கியங்களாய் அமைந்துள்ளன.

வேத மந்திரங்கள் விதிக்கும் கடமைகள், கன்மங்கள், யாவை? வேதமந்திரங்கள் விதிக்கும் விலக்குகள் யாவை? யாகம் முதலியன கன்மங்கள். இக்கன்மங்களைச் செய்வதால் வரும் பயன் யாவை? எனறெல்லாம் மீமாஞ்சை ஆராய்கின்றது. இவ்வாராய்ச்சிக்கு இலக்கண இலக்கிய அறிவுமட்டும் போதாது. மற்றைத் தரிசன அறிவு, யோக ஒழுக்கம், தத்துவஞானம் முதலியன வேண்டும்.

மீமாஞ்சைக்குக் கன்ம மீமாஞ்சை என்ற பெயரும் உண்டு. யாகம் முதலிய கன்மங்களில முக்கியமாகக் கவனத்தைச் செலுத்துவதினால் கர்மமீமாஞ்சை என்ற பெயர் வந்தது. இனிப் பூர்வ மீமாஞ்சை என்ற பெயரும் உண்டு. பூர்வ மீமாஞ்சா என்றால் முதல் ஆராய்ச்சி. மீமாஞ்சையும் வேதாந்தமும் வேதங்களை நேரே கொள்ளும் தரிசனங்கள் என்று நான் முன்னரே இங்கு, இந்திய தரிசனங்கள் யாவையும் தொகுத்துக் கூறியபோது சொன்னேன். மீமாஞ்சை முதல் ஆராய்ச்சி; வேதாந்தம பின் ஆராய்ச்சி. அதனால் வேதாந்தத்துக்கு உத்தரமீமாஞ்சை என்ற பெயர் உளது. பூர்வம்—முன். உத்தரம்—பின்.

மீமாஞ்ச தரிசனத்தின் முதல் தாதை சைமினி முனிவன். இவர் வேதங்களில் உணர்ந்தவற்றையும், வேத விதிகளைப் பிரயோகிக்குமாற்றைக் கர்ணபரம்பரையாயுணர்ந்து பிரயோகங்களில் கைவந்த ஆசிரியன்மார் வாயிலாகக் கேட்டும் நூல் செய்தார். இவருடைய நூல் சைமினிசூத்திரம், இச் சைமினி சூத்திரத்திற்கு சபறசுவாமி பாடியம் செய்தார். இவை இரண்டுமே பழைய நூல்கள். பின் 6ம் நூற்றாண்டில் குமாரில பட்டரும் பிரபாகரரும் தோன்றி மீமாஞ்சையை மிக வளர்த்தனர். தம் முதல் நூலிலிருந்து மாறுபட்டுத் தத்தம் கட்சிகளை உண்டாக்கினர்.

குமாரில பட்டர்

தார்க்கிகர். வாதில் வல்லவர். மற்றைத் தரிசன அறிவில் தெளிந்தவர். மிக்க புகழ்பெற்றவர். இவரைப்பற்றி இன்றும் தீபேத்தில் பெரிதாகப் பேசிக்கொள்ளுகின்றனர் என்று தீபேத்திற்குப் போய் வந்த ஒரு வடமொழிப் பண்டிதன் சொல்லக் கேட்டுள்ளேன். அங்கு நிகழும் பேச்சு வருமாறு.

பழைய கலை உலகில் இந்தியாவில் இந்துக்களும் மகாயான பௌத்தரும் பெரும்வாதப்போர் நிகழ்த்தினர். இந்துக்களுள்ளும் தருக்கத்தில் வல்லுநரான நையாயிகரே முன்னணியில் நின்றனர். பௌத்தரும் தருக்கத்தில் எட்டுணையும் விட்டுக் கொடுப்பவரல்லர்,

பௌத்த நாகார்ச்சுனரை இந்து வாத்சியாயனர் மறுத்தார், வாதசியானரை தின்னாகர் மறுத்தார். தின்னாகரின் தருக்கக் கொள்கைகளை நம் மணிமேகலையில் வரும் பௌத்த தருக்கம் என்பது ஆராய்ச்சியாளர் கொள்கை. தின்னாகரை உத்தியோதகாரர் மறுத்தார். உத்தியோதகாரரைத் தர்மகீர்த்தி மறுத்தார். தர்மகீர்த்தி பெருந்தார்க்கிகர். இவரை மேனாட்டுக் காண்ற்றோடு ஒப்பிடுவர். இன்று நிலவும் பௌத்த தருக்க நூல்களுள் தர்மகீர்த்தியின் நூல்களே சிறந்தவை.

இப்படிப் புலமை வாய்ந்த தர்மகீர்த்தி மீமாஞ்சை நிபுணரான குமாரிலபட்டரை வாதில வெல்ல எண்ணினர். குமாரிலபட்டரின் கல்வி முறை யாது? என்னென்ன நூல்களை ஆராய்கின்றார். ஒழுக்கம் எப்படி? வாழ்க்கை எப்படி? என்றெல்லாம் தெரிந்துகொண்டால் பட்டரை எளிதில் வென்று விடலாம் என்றெண்ணினர் தர்மகீர்த்தி. எண்ணிப் பட்டரிடம் சென்று ஏவல் வேலை இரந்தனர். பட்டர் அவரைத் தன் ஐம்பது வேலைக்காரருக்கு மேலாளாகநியமித்தார். சிலகாலம் வேலை பார்த்தபின் தான் பெற்ற பணத்தைத் தர்மகீர்த்தி தன் பொருட்டுச் செலவு செய்யாது பார்ப்பனர் பலரை அழைத்து அவருக்குத் தானம்வழங்கி வீடுசென்றனர்.

வீடுசென்றதும்குமாரிலபட்டரை வாதுக்கு அழைத்தனர். பட்டர் உடன்பட்டு, "வாதில் வென்றவர் தோற்றவரைக் கொலைசெய்து விடுதலை தண்டனை" என்று நியமனஞ் செய்தார். பட்டர் தோல்வியுற்றால் தனக்கு உணவளித்து ஆதரித்த புண்ணியனைக் கொலைசெய்யவேண்டும், அது தகாது என்று தர்மகீர்த்தி எண்ணி, "வென்றவர்மதத்தைத் தோற்றவர் கைக்கொள்ள வேண்டும்" என்று பட்டருக்கு விடையனுப்பினர்.

பட்டரும் உடன்பட்டு வாது நிகழ்த்தித் தோல்வியுற்றாராம். பின் செய்தி தெளிவில்லை என என் நண்பர் கூறுகின்றார். இது பௌத்தச் சார்பானகதை. தீபேத்தர் பௌத்தர் எந்நாட்டினரும் பழங்கதைகளைத் தங்களுக்குச் சார்பாகச் சொல்வது இயல்பு. (வரும்)

# கோரமான உருவங்களின் வணக்கம்

## பாம்புகளைத் தமதுஉடம்பில் சுற்றி வைத்திருத்தல்

திருமயிலை, திருவாளர், சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

ஒருவர் தமது இடுப்பைச் சுற்றி பாம்புகளை வைத்திருத்தல் இவ்வுலக வழக்கத்திற்கு விரோதமானது. பாம்புகளுடன் சகசமாகப் பழகும் குறவரொன்றும் சாதியினர்தானும் பாம்புகளைத் தங்கள் உடம்பில் அணிகலனகச் சுற்றிக் கொள்ள விரும்பார். ஆனல் அவர்கள்சிலசமயங்களில் பாம்புகளைத்தங்கள் கழுத்தில் மாலைபோல் வைப்பதுண்டு. இப்படி அவர்கள் செய்வது தாங்கள் பாம்புகளின் பழகும் திறமையைக் காட்டும் பொருட்டாம். இத்திறமை அவர்கள் பாமபுடன் பயமின்றி விளையாடுவதைப் புலப்படுத்துவதாம். சிவபெருமானை இதனுல் யாம் குறவரென்று கூறலாமா?

பாம்புகளைத் தமது திருமேனியிற் சுற்றிருக்கும்படி நேர்ந்த காரணங்களையும் இதர திருவிளையாடல்களின் காரணங்களையும் சீர்தூக்கிப்பார்த்தால் அவரைக் குறவரென்று தீர்மானிக்க முடியாது. தமது இடுப்பிற் பாம்பைச்சுற்றி அணிந்திருப்பதினுலேயே அவரை யாம் அங்ஙனம் எண்ணலாகாது. இயற்கை விநோதர்களிற் சிலர் பாம்புடன் அதிகமாகப் பழகுவதுண்டு. அதனல் அவர்களைக் குறவரென்று சொல்லலாமா? ஒரு விஷயத்தைப்பற்றி முடிவுகட்டவேண்டுமானல் அதன் தொடர்புகளை நன்ருகப் பரிசிலனை செய்யவேண்டும். சிவபெருமான் பாம்பைத் தமது இடுப்பில சுற்றிக்கொள்ள நேர்ந்த சந்தர்ப்பங்களை யாம் ஆராய்வோமாயின் அச்செயல் அழகிய பொருளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

மீமாஞ்சை மதத்தைத் தழுவிய தாருகாவனத்து இருடிகள் கடவுள் ஒருவர் உண்டென்னும் நம்பிக்கையில்லாதவர். ஆனல், அவர்கள் வேதக்கிரியைகளை அனுசரித்து மந்திர உச்சாடனத்தில் நிபுணர்கள். அவர்கள் தங்களைத் தாங்களே அதிகமாக மதித்து இறுமாப்புற்றிருந்தனர். நியமத்திற் சிறந்தவர்களென்று எண்ணி, கடவுள் தங்களுக்கு அநாவசியமென்று அவரைப் புறக்கணித்து ஒழுகினர். அவர்கள் கொண்ட தப்பான எண்ணத்தைத் திருத்தி அவர்களை நல்வழிப்படுத்தவேண்டியதாயிற்று. சிவபெருமான் அவர்கள் முன் வெளிப்பட்டு அவர்கள் பரிசுத்த நிலையைப் பரீக்ஷிக்கலானர். திருவருட் பிரகாசமின்மையால் அவர்கள் ஒழுக்கம் கெட்டது. இதனுல் அவர்கள் சிவபெருமான் மீது கோபமுற்றனர். தங்கள் மந்திரசக்தியால் அவரைக் கொல்ல முயன்றனர். ஒரு யாகம் வளர்த்து ஓமாக்கினியிலிருந்து வெளிப்பட்ட பூதங்களையும் குரூரமான மிருகங்களையும், பெருமலைப் பாம்பையும் சிவபெருமான்மீது ஏவினர். பூதங்களையும் மிருகங்களையும் சிவபிரான் வென்றனர் பாம்பு இவ்வுலகோற்பத்திக்குக் காரணமாகியகுண்டலினி சக்தியாகலின் அதனைத் தமது கைகளாற்பற்றித் தமது இடுப்பிற் சுற்றிக்கொண்டனர். பிறகு முயலகன் எனனும் பூதத்தை உண்டாக்கி அப்பூதத்தைச் சிவபெருமானைத் தாக்க அனுப்பினர். சிவபெருமான் ஒருகாலால் அவனை மிதித்துதள்ளி அவன் முதுகெலும்பு நெரிய அவன் மீது பஞ்சகிருத்தியத் தாண்டவம் புரியலாயினர். இருடிகள் நல்லறிவு பெற்றுச் சிவபெருமானை விழுந்து வணங்கி அவரைத் தமது இறைவனுகக் கொண்டனர். எல்லா மந்திரங்களும் வேதக்கிரியைகளும் சிவபெருமானது அருட்பிரகாசமின்றிப் பலியா என்பதை உணர்ந்தனர். இதனுல் சிவபெருமான் பாம்பைத் தமது இடுப்பில் சுற்றியிருப்பதன் பொருள் தெரிந்தவாறு காண்க.


## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)





சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற

## சில்லாலைமுத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. சேபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(ஓ. 30, 11-5.43—10-8.43)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நடிகை ஸ்ரீமதி K. தவமணிதேவி

## பட்டினசபை மண்டபத்திற் பரதநாட்டியம்

### அரசாங்கசபைத் தலைவரின் பாராட்டு

(நமது நிருபர்)

இலங்கைச் சிறந்த நடிகையெனப் பலராற் பாராட்டப்படும் ஸ்ரீமதி K. தவமணி தேவியின் பரதநாட்டியம் சங்கீதம் என்னுமிவைகள், சென்ற சனிக்கிழமை இரவு 8 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பட்டினசபை மண்டபத்தில் திறமையானமுறையில் நடைபெற்றன. ஆடவர் மகளிர் பன்னூற்றுக் கணக்கானேர் அச்சமயத்திற் சமூகமாயிருந்தனர்; இலங்கை அரசாங்கசபைத் தலைவராகிய கௌரவ ஸேர். துரைசுவாமியவர்களும் அச்சமயத்தில் ஆங்குச் சமூகமாயிருந்தனர். அவர் ஸ்ரீமதி தவமணிதேவியைப்பற்றிப் பேசியபோது, தாம் இப்படியான சங்கீத நாட்டிய சபைகளிற் சமூகஞ் செய்தல் அரிதெனவும், ஆனல், குறித்த அச்சமயத்தில் தாம் ஆங்குச் சமூகஞ்செய்தமை அபிமானம் பற்றியெனவும், தாம் தமது நண்பராகிய பிறக்டர் திரு. S. கதிரேசு அவர்களின் வீட்டிற்கு இடையிடையே சென்றபோது இத் தவமணிதேவியைச் சிறுபிள்ளைப் பருவத்திற் கண்டதெனவும், "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்றுங்கு அப்பொழுதே இச் சிறு பெண் சங்கீதம் முதலிய இசைப் பகுதியில் ஆர்வம்பூண்டிருப்பதைத் தாம் அவதானித்ததாகவும், யாழ்ப்பாணத்திலே குலங்குடியிற் பிறந்த ஒரு சிறுமி முதன் முதல் அரிய சாஸ்திரமாகிய பரதநாட்டியத்திலும் சங்கீதத்திலும் அதிக தேர்ச்சியடைந்திருத்தல் யாழ்ப்பாணமக்களுக்கெல்லாம் பெருமிதத்தைத் தருவதாமெனவும் இப் பெண்ணின் சங்கீத பரதநாட்டியங்களை அபிமானித்து இன்னும் ஊக்கப்படுத்துதல் யாழ்ப்பாணமக்களின் கடனுகுமெனவும் பாராட்டிப் பேசினர். பரதநாட்டியம் முடிந்து சங்கீதம் மீளத் தொடங்குவதற்கிடையில், பிறக்டர் V. M. சரவணமுத்து அவர்களும், ஸேர். துரைசுவாமியவர்களின் அபிப்பிராயத்தைப் பின்பற்றி முதல் ஆங்கிலத்திலும் பின்னர் ஆங்குக் குழுமியிருந்தோருடைய வேண்டுகோட்கிணைந்து தமிழிலும் குறித்த நடிகையைப் பாராட்டிப் பேசினர்; சனங்களின் இரைச்சல் காரணமாக அவருடைய பேச்சை நுட்பமாகக் கேட்டல அரிதாயிற்று. ஸ்ரீமதி தவமணிதேவி இன்னுஞ் சிலநாள் இங்கே தங்கிச் சிற்சில கலாசாலைகளிற் பரதநாட்டிய சங்கீதங்களை நடத்த உத்தேசித்திருப்பதாக அறியலானேன்.

---

# பண்ணை அல்லைப் பிட்டித் தாம்போதி

### அமைக்க ஏற்பாடு

புங்குடுதீவு மகாசனசபையின் விசேஷ பொதுக்கூட்டமொன்று 11-6-43 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5மணியளவில சபைமுதல்வர் திரு. S. அம்பலவாணர் அவர்களின்தலைமையின்கீழ் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலின் வீதியில் கூடிற்று. அத்தருணம் நூற்றுக்கணக்கான ஜனங்கள் சமுகமளித்திருந்தனர். எல்லாத் தீவுவாசிகளினதும் கஷ்டநிவாரணத்திற்குப் பண்ணை அல்லைப்பிட்டித் தாமபோதி யவசியமென்பதை அரசினருக்கெடுத்துக்காட்டி அதற்கோர் தாம்போதியமைக்கும்படி போக்குவரத்து இலாக்காவைக் கேட்கவேண்டுமென ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின் பண்ணைப்படகு விபத்துச் சம்பந்தமாய் எடுத்துக்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் சரியல்லவெனவும் அதனை நன்கு பரிசீலனைசெய்ய ஓர் விசேஷ கொம்மிஷனரை நியமிக்கும்படி மகினமதங்கிய தேசாதிபதியவர்களை யச்சபை கேட்டுக்கொள்கின்றதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கடிதத.

---

# படகைப் பார்வையிட நீதிபதி உத்தேசம்

### பொறளை வர்த்தகரின் நஷ்ட ஈட்டு வழக்கு

பொறளையைச் சேர்ந்த திரு. கே. நாகலிங்கம் என்னும் வர்த்தகர் பண்ணைப் படகுப் போக்குவரத்தை நடத்திவந்த பழைய குத்தகைக்காரரான திருவாளர்கள் பி. எஸ். திருச்செல்வம், ஈ. ஜே.பொன்னையா ஆகியோர்மீது தொடர்ந்த வழக்கு மீண்டும் யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில் நீதிபதி திரு. ஜீ. ஸி. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் திரு. நாகலிங்கம் ரூ. 2500 நஷ்டஈடு கோரியுள்ளார். மனுதாரின் மனைவியும் புதல்வனும் புதல்வியும் 1942ம் ஆண்டுமேமாதம் 21ந் திகதி எதிர்மனுதார்களின் படகில அல்லைப்பிட்டியிலிருந்து பண்ணைக்குச் செல்லுகையில் விபத்துக்குள்ளாகிமரணமானதால் அதற்காக ரூபா 20000 நஷ்டஇடு கோரப்பட்டிருக்கிறது. மற்றும் ரூபா 5000 அவர்களின் சாச்சடங்குகளுக்காகவும் இழக்கப்பட்ட நலகங்களுக்காகவும் கோரப்பட்டிருக்கிறது.

எதிர் மனுதார்களின் அஜாக்கிரதை காரணமாக குறித்த மரணங்கள் நேர்ந்தனவென்று திரு. நாகலிங்கம் கூறுகிறார்.

விசாரணையின்போது மாகாணத் தலைவர் திரு. எம். பிரசாத் கூறிய சாட்சியம பின்வருமாறு:-

நான் ஒருமுறை பண்ணைத் துறைக்குப் போயிருந்த பொழுது ஏராளமான மக்கள் ஒரே படகில் ஏறியிருந்ததைக் கண்டேன். அவர்களிற் சிலரை வெளியேற்ற நான் முயன்றேன். அவர்கள் அப் படகிலேயே செலலுவதாகப் பிடிவாதம் சாதித்தமையால் எனது முயற்சி பயன்படவில்லை.

திரு. பிங்கம் கடலிலிருந்து எடுக்கப்பட்ட படகைப் பார்வையிட்டு, அது நல்ல நிலைமையிலிருந்ததென்றும் கடற் பிரயாணத்திற்கேற்றதென்றும் எனக்குத் தெரிவித்தார்.

#### நீர்மட்டம் இல்லை

படகில் நீர்மட்டம் குறிக்கப்படவில்லை. படகின் தண்டேலிடம் யோக்கியதாம்சப் பத்திரம் இருக்கவில்லை. படகில் ஜீவரட்சக உபகரணங்களில்லை.

அடுத்தபடியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வித்தியாதரிசி திரு. என். அருட்பிரகாசம் சாட்சியங் கூறுகையில், படகிற் செல்லுவதற்காகத் தாம் அல்லைப்பிட்டியில் காத்துக்கொண்டு நின்றுரென்றும் சாரதி படகைக் கரைக்குச் சமீபமாகக் கொண்டுவர விரும்பவில்லையென்றும் தெரிவித்தார். கூட்டம் அதிகமாக விருந்தமையால் சாரதி அவ்வாறு நடந்துகொண்டதாகத் தெரிவித்தாரென்றும் சாட்சி கூறினார்.

தண்டேல் ஆட்சேபித்தபோதிலும் படகில் ஏராளமான சாமான்கள் வைக்கப்பட்டு ஏறக்குறைய 40 பிரயாணிகள் ஏறினரென்றும் திரு. அருட்பிரகாசம் கூறினர்.

மேல் விசாரணை ஜூன் மாதம் 23ந் திகதி நடைபெறும். அன்று நீதிபதி படகைப் பார்வையிடுவார்.

---

# யப்பானியரைத் துரத்துவது இலகுவல்ல

### சீனச் சேனைபதி மனைவியின் அபிப்பிராயம்

சீனதேசப் பிரதம சேனுதிபதியாயும் அதிகாரியாகவுமுள்ள சாய்ங் கே ஷெய்க் என்பவரின் மனைவியார் தம் நாட்டினருக்கும் யப்பானியருக்குமிடையே நடந்துவரும் யுத்தத்தைப்பற்றித் தமது அபிப்பிராயத்தைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:-

"யப்பானியரை நாம் இந்நாட்டைவிட்டகற்றலாமென்பதும், அவர்கள் இலகுவில் எங்கள் நாட்டைவிட்டுப் போய்விடுவார்களென்பதும் இலேசில் நடக்குங் கருமமல்ல. அவர்களோடு நாங்கள் கடுமையான போர் செய்தே தீரவேண்டும்; சீனர்களாகிய நாங்கள யப்பானியருடன் ஆறு வருட காலமாக எதிர்த்துச் சண்டை செய்கின்றோம்; எங்கள் நாட்டிற்கு எவ்வகையான உணவுப் பொருளும் யுத்த உபகரணங்களும் இன்னபிறவும் அயல்நாடுகளிலிருந்து வந்து இறக்குமதி செய்யப்படாமல் அவர்கள் எல்லாவழியிலும் தடுத்துக்கொண்டார்கள்; ஆகாய மார்க்கமாகத்தான் ஏதும் பொருள் எங்கள்நாட்டிற்கு வரத்தக்கதாயிருக்கிறது. இன்னும் அவர்களோடு எதிர்த்து யுத்தஞ் செய்ய வேண்டுமென்ற விருப்பமும் மனத்திடமும் உண்டு. ஆனல் நாங்களும் மானுடசன்மங்களேயாவேம்; எங்கள் தேசத்திலுள்ள வீடுகள் பல அழிந்து வர, எங்கள் ஆட்கள்பலர் பகைவருக்கு இரையாக இத்துன்பங்களையெல்லாம் எவ்விதமான மீட்சியுமில்லாமல் எவ்வளவு காலத்திற்கு அநுபவித்தல்முடியும். இத்தேசத்திலுள்ள நான்கிங் நாட்டில் யப்பானியர் தாம் சொன்ன சொன்னபடியெல்லாங் கேட்கக்கூடிய ஒரு போலி இராசாவை இருத்தி அரசாளுகிறார்களெனினும் அங்கே லைசிய விஷயமாகவும் பொருட்சிக்கனம் விஷயமாகவும் அதிக விருத்தியைச் செய்து வருகிறார்கள்; மேலும் தங்கள் பரிபாலனத்தில் அதிக நன்மையுண்டென்று சீனருக்குக் காட்டி அவர்களை மருட்டும் விஷயத்தில் இடுபட்டிருக்கும் யப்பானிய ராசதந்திரிகளின் பேச்சை இங்குள்ள சீனமக்களும் நம்புகிறார்கள். பிருத்தானியரின் அதிகாரத்திலிருந்த ஹொங்ஹொங் தானம் தம் கைப்பட்டபோது யப்பானியர் தாங்கள் சிறைபிடித்த பிருத்தானியரைக் கொடுமையாக நடத்தி, சீனமறியற்காரரை மாத்திரம் இதமாக நடத்தினுர்கள். யப்பானியர் இப்பொழுதும் சீனருக்கு என்ன சொலலுகிறார்கள், "உங்களைநாங்கள் உங்கள் அடிமைத் திறத்திலிருந்து மீட்டுச் சுவாதீனந் தந்து நடத்துவதற்காகவே வந்திருக்கின்றோம்; உங்களை இவ்வளவு காலமும் கஷ்டப்படுத்தி வந்தவர்களையே நாங்களும் இப்பொழுது நசிக்கத் தலைப்பட்டிருக்கிறோம்" என்று யப்பானியர் சொலலுகிறார்களாம்; இப்படியாக அவர்கள் செய்யுஞ் செயல அபாயத்திற்கு ஏதுவாகுமென அஞ்சத்தக்கது."

---

# பாலைக் கலி

2-ம் பக்கத் தொடர்ச்சி

விடைகூற முடியாது விழிக்கத்தக்க முறையில் அவள் கடாக்கள் இருத்தலையும், அவதானிக்கலாம். பிறிதோரிடத்து (செ.௨௧) "மயக்கத்தினையுடைய மகனே! இவளைப் பிரிந்திருத்தலை நெஞ்சு விரும்பும் என்று சொல்லும் அருளில்லாத சொல்லையும் (இப்போது) நீ சொன்னுய். எம்மை விரும்பி நன்மையையுடைய நறிய நுதலை நீவி 'நின்னிடத்தி னின்றும் பிரியேன் நீ அஞ்சுதலைத் தவிர்வாய்' என்று சொல்லும் சொல்லினையும் (முன்பு) நீ சொன்னுய் இவ்விரண்டினுள் யாவோ உண்மையானவை?" என்று கடாவுகின்றுள்.

பொருள்வயிற் பிரிதல்
வேண்டும் என்னும்
அருளில் சொல்லும்
நீசொல் லினையே
நன்னர் நறுநுதல்
நயந்தனை நீவி
நின்னிற் பிரியலென்
அஞ்சலோம்(பு) என்னும்
நன்னர் மொழியும்
நீமொழிந் தனையே
அவற்றுள், யாவோவாயின
மாஅல்மகனே

அடுத்த பாட்டில், "மகளிருடைய நலத்தை அவர்களை இரந்து பெற்றுத் தாதைத் தேடி உண்ணும் வண்டுபோல நுகர்ந்து, அதனை அவர் வேண்டின காலத்து அவர்க்குக்கொடாது கேட்டினைக் கொடாநின்றீர்" என்று தலைவனை விளிக்குந் தோழி அதற்குக் கூறும் உவமை மிக இனியது; உலக வழக்கோடொட்டியது, அவடன் சொல்வன்மையைத் (புலவர் சொல்வன்மையை) தெள்ளிதிற் காட்டுவது. "தாம் வாங்கி யுண்ணும் கடன் பொருளை வழிபாடாகச் சொல்லி இரந்து வாங்கும் பொழுது முகமலர்ந்திருததலும், அங்ஙனம் வாங்கின பொருளை மீளவுங் கொடுக்கும் பொழுது முகங் கெட்டிருத்தலும் புதிதல்ல. அஃது இயல்புதான், ஆதலால், உன்செயலும் சரிதான்" என்று குத்திக் கூறும் வார்த்தைகள் எத்துணை வன்மையோடு கூடியவை.

உண்கடன் வழிமொழிந்
திரக்குங்கால் முகனுந்தாம்
கொண்டது கொடுக்குங்கால்
முகனும்வே றுகுதல்
பண்டுமிவ் வுலகத்
தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்திர்

என்னும் அடிகளை நோக்குக. தோழியின் மதிநுட்பத்திற்கும் சொல் வன்மைக்கும் இன்னும் பல எடுத்துக் காட்டலாம். நிற்க.

இளவேனிலைப் பற்றி இப்பாலைக் கலியிற் பல செய்யுட்களுள் ஆசிரியர் அழகுறச்சொல்லிப்போதலை நாம், ஆங்காங்குக்காணலாம். இளவேனில் வேனிற் காலத்தின் முன்பருவமாகிய வசந்த காலமாகும். அது: சித்திரை, வைகாசி மாசங்களிலே வருவது. தென்றல் வீசலும், வண்டு, கிளி, பூவை, அன்றில், குயில் இவை மகிழ்தலும், மாங்கனி யுதிர்தலும், புன்னை, மகிழ், தாழை, சண்பகம் இவை முதலியன மலர்தலும், இக்காலத்துக்குரியன வாதலால் இக்காலம் பிரிந்தவர்க்குப் பெருந்துன்பளிப்பது கூடியிருந்தார்க்குப் பேரின்பளிப்பது; இக்காலம் இப்பாலைக்கலியின் கண்ணே எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது என்பதற்குச் சில பாட்டுக்களைத் தந்து இக் கட்டுரையை முடிப்பாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கி நடுநிலைமை வகிக்கும்

### ஜேர்மன் அரசாங்க அதிகாரி கருத்து

லண்டன் யூன் 17—

இப்போரில் நடுநிலைமை வகிக்கத் துருக்கி உறுதிகொண்டிருக்கிறதென்பதை ஜெர்மனி நன்கு தெரிந்துகொண்டிருக்கிறதென்று ஜெர்மன் வெளிநாட்டுக் காரியாலய அதிகாரியான டாக்டர் ஸ்மிட் கூறியதாக ஜெர்மன் ரேடியோ இன்று தெரிவித்தது. டாக்டர் ஸ்மிட் மேலும் கூறியதாவது:— நேசதேசங்களின்பக்கத்திற்சேரத் துருக்கிமுடிவு செய்துவிட்டதாகப் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் கூறிவருவதை பெர்லின் வட்டாரங்கள் அனைத்தும் பிரசாரமென்றே கருதுகின்றன.

ஜெனரல் கன்னிங்ஹாம் துருக்கிக்கு விஜயம் செய்திருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு அந்நாட்டைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ள ஆங்கிலோ—அமெரிக்கா முயலும் பொழுது துருக்கி நடுநிலைமைவகிக்க உறுதிகொண்டிருக்கிறதென்று அதன் பிரதம மந்திரி ஸராஜோக்லு கூறிவருவது நன்கு கவனிக்கத்தக்கது.

### விச்சியிலிருந்து துருக்கி ஸ்தானிகர் வாபஸ்

விச்சி பிரான்ஸிலுள்ள துருக்கி ஸ்தானிகர் காரியாலயத்தின்மீது ஜெர்மன் இரகசியப் பொலிசார் விதித்த நிர்ப்பந்தங்களை ஆக்ஷேபிக்கும் முகமாக அங்குள்ள துருக்கி ஸ்தானிகர் அங்காராவுக்குத் திருப்பியழைக்கப்பட்டிருப்பதாக பேர்ன் செய்தியொன்று கூறுகிறது.

பிரான்ஸுடன் தனக்கு இருந்த உறவைத் துருக்கி ரத்துச்செய்துவிட்டதென்று கூறும் செய்திகளுக்குக் கொஞ்சமும் ஆதாரமேயில்லையென்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி விச்சியில் ஒன்றுமே தெரியவில்லையென்றும் அது அறிவிக்கிறது.

## களனி உபதேர்தல் மனு தள்ளப்பட்டது

மனுதார்களோ அல்லது மனுதார்களின் சார்பிலோ எந்தவிதமான ஜாமீன் தொகையும் கட்டப்படவில்லையென்ற ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு நீதிபதி திரு. கிரெட்ஸர் களனி உபதேர்தல் மனுவை நேற்றுத் தள்ளுபடி செய்தார்.

திரு. ஜே. ஆர். ஜயவர்தன அரசாங்கசபைக்குக் களனி உபதேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்டதை எதிர்த்து எம். டி. மோடியஸ் கொஸ்தா டி. ஏ. டொன்தோபியஸ் ஆகிய இரண்டு வாக்காளர்கள் ஒரு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

தேர்தலின்போது சட்டவிரோதமான முறைகள் அநுஷ்டிக்கப்பட்டதாகவும் லஞ்சம் கொடுக்கப்பட்டதாகவும் வாக்காளர்களுக்கு விருந்துகள் நடத்தியதாகவும் சட்டவிரோதமான செல்வாக்கைப் பிரயோகித்ததாகவும் வாக்காளர்களை வாக்களிக்கும் ஸ்தலத்துக்குக் கொண்டு செல்வதிற் சட்டவிரோதமான நடவடிக்கைகள் கையாளப்பட்டதாகவும் அம்மனுவிற் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனு சம்பந்தமாகத் திரு. ஜயவர்த்தன சில ஆட்சேபனைகளைக் கிளப்பியிருந்தார்.

குறித்த ஆட்சேபனைகளை நீதிபதி மிஸ்டர், கிரெட்ஸர் விசாரித்து அவைகளுள் ஒன்றை ஏற்றுக்கொண்டு மனுவைத் தள்ளுபடி செய்தார். செலவு தொகையின்றி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

## ஆஸ்திரேலியா ஆக்கிரமிக்கப்பட முடியாததேன்

கான்பெரா யூன் 18—

ஜப்பானியர் இப்பொழுது ஆஸ்திரேலியாவைப் படையெடுத்துத் தாக்கமுடியாதென்றும் தாம் சமீபகாலத்தில் விடுத்த அறிக்கையைக் குறைகூறியவர்களுக்கு ஆஸ்திரேலியப் பிரதம மந்திரியான திரு. கேர்ட்டின் பதிலளிக்கையில் 'ஆஸ்திரேலியாவைச்சத்துருவால்ஆக்கிரமிக்க முடியாதென்று நான் கூறியதை மீண்டும் கூறுகிறேன் என்று அவர் மேலும் கூறியதாவது:—

இராணுவ விஷயங்களை அடிப்படையாகக்கொண்டு நான் அந்த அறிக்கையை வெளியிடவில்லை. ஆனால், கிடைக்கக்கூடியதாகவிருந்த சக்திகளைப்பற்றிய ஞானத்தையும் திறமையுடன் செய்யப்பட்ட மதிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு அந்த அறிக்கையை விடுத்தேன். ஆஸ்திரேலியாவுக்கு வடக்கில் ஜப்பானியர் இரண்டு லட்சம் வீரர்களையும் கப்பல்களையும் குவித்து வைத்திருக்கின்றனரென்று நான் அறிவித்தபின்னர் நிலைமையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆஸ்திரேலியாவின் நிலைமையை அரசாங்கம் மதிப்பிட்டுப் பார்த்ததில் பிரிட்டனின் நிலைமைபோன்று இருக்கிறது. 1942-ம் ஆண்டின் முற்பகுதியில் ஆஸ்திரேலியா ஆக்கிரமிக்கப்படத்தக்க ஆபத்தான நிலைமையிலிருந்தது. 1942-ம் ஆண்டின் பிறபகுதியிலும் 1943-ம் ஆண்டின் முற்பகுதியிலும் நாம் நம்மைப் பலப்படுத்திக்கொண்டும் சத்துருவை எதிர்த்து நிறுத்தி வைத்துக்கொண்டும் இருக்கக்கூடியதாயிருந்தது. இப்பொழுது விமானங்களைக்கொண்டும் கூட்டுநடவடிக்கைப் படைகளைக்கொண்டும் தாக்குதல்கள் நடத்தத் தயாரான நிலைமையிலிருக்கிறோம்.

ஆஸ்திரேலியா ஆக்கிரமிக்கப்பட முடியாத நிலைமையில இருக்கிறதென்று திரு. கேர்ட்டின் விடுத்த அறிக்கைக்கு பஸிபிக்கிற்குப் புதிய படைகள் அனுப்பப்பட்டிருப்பதுதான் காரணமென்று யுத்தக்கைத்தொழில் மந்திரி திரு. டெட்மன் கூறினார். குறிப்பிடத்தக்க அளவான விமானங்கள் ஆஸ்திரேலியாவுக்குக் கிடைத்திருக்கின்றன.

## இலங்கைப் பாதுகாப்புப் படை

### புதியதிட்டத்தைத் தேசாதிபதி அங்கீகரித்தார்

இலங்கைப்பாதுகாப்புப் படைக்கு எதிர்காலத்தில் அதிகாரிகளைத் தெரிவுசெய்வது அவர்களுக்குப் பயிற்சியளிப்பது ஆகியவை சம்பந்தமான ஒரு திட்டத்தை மந்திரி சபையோடுகலந்தாலோசித்தபிறகு மேன்மை தங்கிய தேசாதிபதி அங்கீகரித்திருக்கிறார்.

தியத்தலாவையிலுள்ள பயிற்சிப் பாடசாலையில் தெரிந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொருவரும் பயிற்றப்படுவரென்பதும் பயிற்சியில் வெற்றி பெறுமட்டும் அவர்களுக்குப் பதவிகள் வழங்கப்படமாட்டாது என்பதும்தான் தற்போதைய திட்டத்தில் செய்யப்பட்டிருக்கும் முக்கிய மாறுதலாகும்.

இந்தப்படைக்கு அதிகாரிகள் தேவைப்படும்போது பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படும்.

தற்போது பாதுகாப்புப் படையிலிருப்பவர்கள் தலைமையதிகாரிகளால் இதுவரை சிபார்சு செய்யப்பட்டதுபோலவே இனிமேலும் தொடர்ந்து சிபார்சு செய்யப்படுவார்கள்.

## கொழும்பு விவேகானந்தசபை

### 40-வது வருடாந்தக் கூட்டம்

கொழும்பு விவேகானந்த சபையின் நாற்பதாவது ஆண்டுக்கூட்டம் நிகழும் சுபானு௵ வைகாசி மாசம் 26ந் திகதி சனிக்கிழமை (12-6-43) பிற்பகல் 3 மணியளவில் மேட்டுத்தெருவிலுள்ள சபை மண்டபத்தில் நிகழ்ந்தது. சபையின் அக்கிராசனரும் அரசாங்கசபை அங்கத்தவருமாகிய திரு. சு. நடேசனவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சென்ற ஆண்டின் அறிக்கையும் கணக்குகளும் சபையில வாசிக்கப்பட்டுச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்ட பின்பு சபையின் சட்டங்களுள் சில திருத்தப்பட்டன. அதன்பின், அடுத்த ஆண்டின் உத்தியோகஸ்தர் முதலியோர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுள் முக்கியமானோர்:

தலைவர்: திரு. சு. நடேசனவர்கள்
உபதலைவர்கள்: திருவாளர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பல மவர்கள், க. நடராஜா அவர்கள், ஆ. செல்லமுத்து அவர்கள், பெரிசுந்தர மவர்கள், டாக்டர். ஞா. விக்னராசா அவர்கள், திருவாளர்கள். H. M. தேசாய் அவர்கள், ச. பராராசசிங்கம் அவர்கள், க. கனரத்தின மவர்கள், ஆதியோர்.

காரியதரிசி: திரு. சு. சிவசுப்பிரமணிய மவர்கள், தனதிகாரி திரு.நா. சோமாஸ்கந்தபிள்ளை யவர்கள்.

பின்னர், திரு. சோம. சரவணபவனவர்கள் கொழும்பிலுள்ள இந்துக்கள் தமிழ் மறைகளைப் பண்ணுடன் ஓதுவதற்குப் பயிற்றுதற்கும் அவர்களுக்குச் சமயக் கிரியைகள் செய்வதில் உதவுவதற்குமாக விவேகானந்த சபையானது சைவ ஓதுவார் ஒருவரை நியமித்தல் வேண்டும்" என்னும் பிரேரணையைப் பிரேரிக்க திரு. சோ. நடராஜனவர்கள் அதனை ஆமோதித்தார். தீர்மானம் சபையோரால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பட்டது.

—கடிதம்

## சர்வகலாசாலையில் டக்டர்களுக்குப் பயிற்சி

### 9 மாதகாலம் நடைபெறும்வகுப்பு

டக்டர்களாகப் பட்டம்பெற்றவர்கள் மேலும் வைத்தியத் தொழில் பயிலுவதற்குச் சர்வகலாசாலையைச் சேர்ந்த வைத்திய சாஸ்திர பீடத்தால் ஏற்படுத்தப்பட்ட பயிற்சி வகுப்பு அடுத்த மாதத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இப்பொழுது அரசாங்க சேவையிலிருக்கும் ஆறு டாக்டர்கள் அவ்வகுப்பிற் சேர்ந்து பயிற்சி பெறுவார்கள்.

பிரிட்டனில் வைத்தியம், சத்திர வைத்தியம், மருத்துவம் முதலியவற்றில் அளிக்கப்படும் பயிற்சிக்குப் பதிலாக இப்பயிற்சி திருப்திகரமான முறையில் உபயோகப்படத்தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இப்பயிற்சி வகுப்பு 9 மாதங்கள் வரை நடைபெறும். ஒன்பது மாதங்களுக்குப்பின்னர்ப் பரீட்சை நடத்தி அதன் முடிவைப்பார்த்துப் பட்டங்கள் வழங்கப்படும்.

இப்பயிற்சி வகுப்பிற் சேரவிருக்கும் ஆறு டக்டர்களுக்கும் ஒன்பது மாதங்களுக்கு விடுதலை வழங்கப்படவிருக்கிறது. அவர்கள் தினமும் வகுப்புகளுக்குச் செல்லவேண்டும்.

## மரண தண்டனை நிறைவேறியது

தேசாதிபதி காரியாலயம் விளம்பரப்பகுதி மூலம் சென்ற வெள்ளிக்கிழமை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை யொன்று கூறுவதாவது:—

பி. பி. ஆர். செலின்மீது சுப்பிரீம் கோர்ட் விதித்திருந்த மரண தண்டனை ஜூன் மாதம் 15-ந் தேதி வெலிக்கடைச் சிறையில் நிறைவேற்றப்பட்டது.

குறைந்த விலையில் துணிகள்
வேஷ்டித்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.
R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரியகடை—யாழ்ப்பாணம்.
K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44

தேயிலை
மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலை
யாழ்ப்பாணம் கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்டாரிடம் கிடைக்கும்.
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.
யாழ்ப்பாணம், கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்,
150, ஆஸ்பத்திரித்தெரு, பெரியகடை, யாழ்ப்பாணம்.
மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலைக்கு ஏஜெண்டுகள்.
Mis. 45. 3-6—28-6-43.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 21, June 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org